ஸ்ரீ திரிபுரசுந்தரீ ஸமேத ஸ்ரீசந்திரமௌளீசுவராய நம:

# ஆர்ய தர்மம்.

நல்லகுணங்களிவையென்றும், கெட்டகுணங்களிவையென்றும் பிரமாணமூலமாகப் பெரியோருபதேசித்தபடி தெரிந்துகொண்டு தன்னிடம் துர்குணங்களிருப்பதாகத் தெரிந்தால் அவைகளை ஸமூலமாக முற்றிலும் விலக்கி நல்லகுணங்களையடைய ஸாதுக்கள் முயற்சிப்பார்கள். பிறரிடம் கெட்டகுணங்களிருப்பதாக ஸ்பஷ்டமாய்த் தெரிந்தாலும் மனதிலு மதைச்சிந்திக்கமாட்டார்கள். அப்படி யிருக்கையில் வெளியிட்டுச் சொல்ல எப்படித்துணிவார்கள். எவ்விதத்திலும் துணியமாட்டார்கள். ஆனால் அவர்களிடம் ஸஹவாஸம் செய்யாமல் உபேக்ஷையாய் விலகியிருப்பார்கள். துர்ஜனர்களோவெனில் தன்னுடைய குறைகுணங்களில் கிஞ்சித்தேனும் மனதைச் செலுத்தாமல் பிறரையே பார்ப்பார்கள். பார்த்துமுள்ளபடி கிரஹிக்கமாட்டார்கள். நற்குணம் நிறைந்தவர்களை குணஹீனர்களெனச் சொல்லுவதோடு மாத்திரமில்லாமல் கெட்டகுணமுள்ளவர்களெனக் கெட்டியாகத் திட்டுவார்கன். ஸ்தூலதிருஷ்டிகளு மிஷ்டத்தை இலகு ஸாதனங்களான வந்தனாதி வழிபாடுகளாலேயே அடையட்டுமென உட்கருத்துடன் ஸூக்ஷ்மஸ்வரூபத்தையும் ஸ்தூலவடிவமாகக்காட்டி கோபுரப் பிராஸாதாதிகளோடு பெரிய பெரிய கோவில்களைக்கட்டி மந்திரப்பிரபாவத்தால் பூர்ண ஸான்னித்தியமுள்ள அந்தந்த தேவதைகளின் அர்ச்சாஸ்வரூபத்தை ஸ்தாபித்திருக்கிறார்கள். அக்ஞர்களுங்கரையேறக் கருணையுடன் கற்பித்த இக்காரியத்தைத் தற்காலத்திய சிலர் வீணென்றே நினைக்கிறார்கள். இவைகளை விளக்கும் வேதாகமாதிகளை வேண்டாமென்கிறார்கள். கோவிலே கூடாதென்றும் கடவுளே அங்கில்லை யென்றும், அங்கீகரிக்கு மிவர்கள்—பஞ்சமர்களைக் கோவிலுக்குள் விடவேண்டுமென்று எதற்காகக் கூறுகின்றார்களோ விளங்கவில்லை. சாஸ்திரமே சரியல்லவெனச் சாதிக்கத்தலையிட்டவர்கள் நீதி நியாயம்பேச எப்படித்துணிகிறார்களோ தெரியவில்லை. வேதமே வேண்டாமென வெறுப்பவர் வேதாங்கமான சோதிடத்தில் மாத்திரம் நம்பிக்கைவைத்து நாள் நக்ஷத்திரம் பார்க்கிறார்கள். இவர்கக்ஷி பாதிச்சுரைக்காய் விரைக்கு—பாதிச்சுரைக்காய் கறிக்கு—என்னுங்கதையையொத்ததாயிருக்கிறது இவர்கள் தங்களைச் சரணமடைந்தவர்களைச் சரிப்படுத்துவதோடு நில்லாமல் பிராமணரது பிராமாணிகமான பிராசீன ஆசாரத்தைத் திருத்தத்தலையெடுக்கிறார்கள். அவனவனும் தன் நலத்திற்குப் பாடுபடுவானல்லவா! பிறர்காரியத்தில் நாமேன் பூருகிறோமென்ற பகுத்தறிவு இவர்களுக்கு இல்லாமற்போனது பரமாச்சரியமாயிருக்கிறது. வீணில் பிறரைப்பழித்துப் பாபத்தைத்தேடுகிறார்களேயென்று ஸாதுக்கள் நினைப்பார்கள். ஸாதுக்கள் நினைக்கிறபடி யாவரும் தங்களுக்கு நல்லகுணத்தைத்தேடி நன்மையடைவார்களாக. சுபம்.

பத்திராதிபர்.

# குணதோஷங் கூறுபவர் எவர்?

ஒரு விஷயத்தை ஆராய்ச்சிசெய்து அதில் குணத்தையாவது தோஷத்தையாவது இலகுவாய் எல்லோரும் கூறிவிடமுடியாது. சிறந்த அறிவுடைய சிஷ்டர்களாயின் ஆராய்ச்சி செய்து பார்க்கலாம். அவர்களுக்கும் உள்ளபடி உண்மையில் குண தோஷங்கள் தோன்றுமோ தோன்ருதோவென ஸம்சயிக்கக் கூடியதாகும். ஆசார்ய பதவியில் அபிஷேகம்பெற்றவர்களுள்ளே ஒருவர் ஸித்தாந்தப்படுத்தியதை மற்றவர் சம்மதிக்கவில்லே. மற்றவருக்கு சரியாயிருந்தும் சரியென்று தோன்ருமையால் அவர் அதை சம்மதிக்கவில்லையா? அல்லது அது சரியில்லாமையால் சம்மதிக்க வில்லையா? என்று நிச்சயிக்கமுடியவில்லே. "வஸ்துவில் விகல்ப்பம் ஸம்பவிக்காது,, என்று கூறப்பட்டவஸ்து விஷயத்திலே இந்த கதியானுல் விகல்ப்பத்திற்கு ஏராளமாயிடம் கொடுக்கும்கிரி யையில் கேழ்க்கவேண்டுமா? ஆகவே உண்மைவிங்குவது அஸாத் தியமாகிறது. அப்படியிருக்கையில் அற்ப அறிவுடையோர் ஒரு விஷயததில் ஆராய்ச்சி செய்யப்புகுவதும், குணதோஷங்களேக் கூச்சமற்றுக் கூறிவிடத்துணிவதும், அதைக்கண்டு சிலகாலிகள் களிப்பதும், கலிமஹாராஜனுடைய பின்பலம் பற்றியேயன்றி வேறில்லே. இராமாயணதாத்பர்யம், பாரததாத்பர்யம், பெரியோர் கள்பலவிதத்திலும் பராமர்சம் செய்து பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. அவற்றுளெது உண்மையானது? என்று கண்டுபிடிக்கமுடிய வில்லே. அவரவரது கக்ஷியார் அததை உண்மையென்றும் மற்றது சரியல்லவென்றும் ஸாஹஸமாய்க் கூறுகிருர்கள். அப்படி இருக்கையில் பால்யம்முதல் பண்டிதரிடம் பணிந்து கல்வி கற்காமல் ராஜபாஷையைப் பிரதானமாகவும், மற்ற தேவபாஷை தேசபாஷை முதலியவைகளே பிரதானமில்லாததாகவும் ஏற்படுத்தி நடத்தப்பட்டுவரும் ஸ்கூல்களில் வடமொழியிலும், தென்மொழி யிலும், பாட புஸ்தகமாயேற்படுத்திய ஒரு புஸ்தகத்தின் ஓர்

மூலையைக் கவனமில்லாமலே கற்று தைவவசத்தால் பரீக்ஷையில் தேர்ச்சியடைந்தவர்கள்தான் தற்போது வால்மீகியாகவும், வியாஸராகவும், கம்பராகவும், காளமேகப்புலவராகவும், தாங்களே நினைத்துக்கொண்டு பிராசீனசம்ப்ரதாயத்திற்கு முற்றிலும்முரண்படும்படியான ஆராய்ச்சிசெய்யத்தொடங்கி அச்சிலியற்றி வெளியிடுவதற்கு இலகுவாய் முடியும்படி அச்சாபீஸ்கள் பல ஏற்பட்டிருப்பதால்தோன்றியதையெல்லாம் கண்டபடி பிரசுரித்துவிடுகிறார்கள். அம்மட்டோடில்லாமல் சிலர் பழையமுறைகளைத் தூஷிக்கவும் முன்வருகிறார்கள். அப்படி இருக்கையில் தானாகவே ஒன்றைத் தீர்மானிக்கச்சக்தியற்று அதற்காகப் பிறர்முகத்தைப் பார்த்திருப்பவர்கள்-பிராசீனவழியே சரியா? அல்லது புதியபரிஷ்காரம் சரியா? எனத்தீர்மானிக்க முடியாமல் திண்டாடிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களது புத்தியை அந்தந்தகக்ஷியார் கலக்கிவிடுகிறார்கள். அதனால் தர்மானுஷ்டானம் சாஸ்திரீயமுறையிலேற்படுவதில்லை. ஆஸேதுஹிமாசலமுள்ள ஆஸ்திகரனைவரும் ஒரேவிதமாக அனுஷ்டிக்கவேண்டிய உபாகர்மம் - காயத்திரீஜபம் இவைகள் இவ்வருஷத்தில் பலவாறாக அனுஷ்டிக்கப்பட்டதே இதற்கு சரியான உதாரணமாகும். இவ்விதம் ஆஸ்திகர் அனுஷ்டிக்க வேண்டிய நித்திய நைமித்திகாதிதர்மங்கள் திண்டாட்டத்தில் இருக்கையில் ஆஸ்திகாது ஆசாரவிஷத்தில் மற்றவர்புகுந்து அதில் குணதோஷம் சொல்லக் கிளம்பிவிட்டார்கள். ஆஸ்திகதருமத்தில் நாஸ்திகர்களாகுணதோஷங்கூறுவதுபிராமணதர்மத்தில்பிராமணரல்லாதாரா குறைகூறுவது? வைதிகமுறைப்படி நடக்கவேண்டிய வேதியர்விவாஹவிதியை லௌகிகமுறையில்பயின்றவர்களா லௌகிகவழியில்விசாரித்துமுடிவுசெய்வது? இதெல்லாம்காலவசத்தால் கலங்கிக்கிடக்கிறது. தர்மாசார்யர்களும், தார்மிக பண்டிதர்களும் இந்தசந்தர்ப்பத்தில் எவ்வளவு பிரயாசைப்பட்டு ஸித்தாந்தம் செய்துகொள்ள முயன்றாலும் சிலவிடத்தில் பயனற்றுப்போகிறது. இப்படி தர்மமார்க்கம் தவறிக்கிடப்பதால் தேவர்களும் சிலவிடத்து அதிவிருஷ்டியையும் சிலவிடத்து அனாவிருஷ்டியையுமுண்டுபண்ணி கஷ்டப்படுத்துகிறார்கள். அப்படி தேவகோபத்திற்கு ஆளாகாமல் பண்டிதர்கள்சொற்படி நடந்து யாவரும் க்ஷேமத்தை அடைவார்களாக. சுபம்.

---

பத்திராதிபர்,

# புருஷார்த்தக்ரமம்

(678-வது பக்கத்தொடர்ச்சி)

தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்னும் புருஷார்த்தக் கிரமத்தில் தர்மத்தை முதலிலும் மோக்ஷத்தை முடிவிலும்கூறி அர்த்தகாமங்களை நடுவில் கூறியதற்கு மற்றொரு முக்யமான அபிப்ராயமுண்டு. அதென்னவெனில் கூறுவாம். தர்மமோக்ஷம் இரண்டைத்தவிரப் பாக்கியுள்ள அர்த்தம் காமம் இரண்டும் ஸத் (நல்லது) அஸத் (கெட்டது) அதாவது சாஸ்திரத்தால் விலக்கப்படாதது விலக்கப்பட்டது என இரண்டு விதப்படும். தர்மம் மோக்ஷம் இரண்டும் அவ்வித பிரிவையுடையதன்று. சாஸ்திரத்தால் விலக்கப்பட்ட தர்மம் என்று ஒன்று கிடையாது. சாஸ்திரத்தால் விலக்கப்பட்டிருந்தால் அதுகீழ்சொல்லியபடி அதர்மமேயொழிய தர்மமில்லை. ச்யேநயாகம் முதலியதைத் தர்மமென்றும் அதர்மமென்றும் இரண்டு விதமாகக்கூறும் சிலரது அபிப்ராயப்படி அது சாஸ்திரத்தால் விலக்கப்பட்ட தர்மமென்று கூறுவது பொருந்துமென்றாலும்

फलतोऽपिच यत् कर्म नानर्थेनानुबद्ध्यते ।
केवलप्रीतिहेतुत्वात्तद्धर्म इति कथ्यते ॥

"பலத்தின் மூலமாகக்கூட யாதொரு கர்மாவானது அனர்த்தத்தை உண்டுபண்ணுகிறதில்லையோ அந்தக்கர்மாவே கேவலம் பிரீதியை உண்டுபண்ணுவதால் தர்மமென்று சொல்லப்படும்" என்று சியேன யாகத்தை தர்மத்தினின்றும் விலக்கிக்கூறும் வார்த்திக வசனம் முதலிய பல பிரமாணங்களால் பலரது அபிப்ராயப்படி சியேனயாகம் தர்மமாகாததால் தர்மத்தில் ஸத் அஸத் என இரண்டுவிதப் பிரிவு கிடையாது. தர்மம் ஸத்தென்று ஒரே விதமாயுள்ளது. இவ்விதமே மோக்ஷமும் ஸத் (நல்லது) சாஸ்திரத்தால் விலக்கப்படாதது என ஒரே விதமாயுள்ளது. சாஸ்திரத்தால் விலக்கப்பட்ட அதர்மத்தால் ஏற்பட்டு அதனுல் அஸத் கெட்டது எனக்கூறப்படும் நரகானுபவம் முதலிய துக்கானுபவமானது மோக்ஷம் என்றே கூறப்படுவதில்லை, அது பந்தமெனப்படும். ஆகையால் மோக்ஷம் ஒரே விதமாயுள்ளது. அத்வைதம்

அவைதிகமென்று பயனற்றதெனப்படிக்கும் சில துவைதாசார்ய ரதுமதத்தில்மாத்திரம் முக்தி ஸன்முக்தி அஸன்முக்தி என இரு வகைப்படும்—என்று துக்கானுபவமுள்ள அஸன்முக்தி என ஓர் முக்தி அங்கிகரிக்கப்பட்டிருக்கிறது. அவ்விதம் அந்த மதத்தில் கூறப்பட்டிருந்தாலும் துக்கானுபவமுள்ள அவஸ்தை பந்தமெனப்படுமேயொழிய முக்தியெனப்படாது என்பது உண்மையறிந்த வைதிகர்களின் வைதிகமான மதத்தின் முடிபு. இதன் விரிவு பிறகு துவைதமத நிராகரணப் ப்ரஸ்தாவத்தில்வரும். ஆகையால் மோக்ஷமும் நல்லது என ஓரே பிரிவை உடையதென முடிந்தது. அர்த்த காமங்கள் நல்லது கெட்டது என இருவிதப் பிரிவையுடையதெனக் கூறினேம். எந்த அர்த்த காமங்கள் நல்லவை எந்த அர்த்தகாமங்கள் கெட்டவை என்றால் கூறுவாம். லோகத்தில் மனுஷ்யன் அர்த்தகாமங்களையே ஸேவிக்கக்கூடாதென்று சாஸ்திரத்தின் அபிப்பிராயமில்லை. அதுகளை அவச்யம் ஸேவிக்கத்தான் வேணுமென்ற கட்டாயமுமில்லை. ஆனால் அவர்ஜனீயமாய் அதாவது விடமுடியாதபடி அர்த்தகாமங்களைஸேவிக்க நேர்ந்தால் இன்ன இன்ன அதிகாரி இன்ன இன்ன நியமங்களுடன் இன்ன இன்ன அர்த்தகாமங்களை ஸேவிக்கலாமென்று தர்ம சாஸ்திரங்கள் எந்த அர்த்த காமங்களைக் கூறுகின்றனவோ அந்த அர்த்தகாமங்கள் நல்லவை. எந்த அர்த்தகாமங்களைத் தடுக்கின்றனவோ அவை கெட்டவை, அவ்விதம் கெட்ட அர்த்தகாமங்களை ஸேவித்தால் மனுஷ்யனுக்கு விசேஷமாய் நரகாதி துக்கங்கள் மேன்மேல் துடர்ச்சியாய் நேரும். இக்கருத்தையே—

दाराः पुत्रा श्शयन मशनं भूषणाच्छादने वा
यच्चेदक्षं पुमभिलषितं तेषु माशङ्किकः कः ।
किंत्वेतेषां भवति नियम स्सेवने कोपि कोपि
द्वेषस्तत्रापिच यदि भवेत्तत्र वक्ता कृतान्तः ॥

"பத்னி, புத்திரன், படுக்கை, ஆஹாரம், ஆபரணம், வஸ்திரம் முதலிய புருஷனால் ஆசைப்படக்கூடிய எவ்வித விஷயத்தையும் மனுஷ்யன் அனுபவிக்கக்கூடாதென்று தடுத்தவன் யார்? ஒருவருமில்லை. அதையெல்லாம் மனுஷ்யன் ஆக்ஷேபமன்னியில் அனுபவிக்கலாம். ஆனால் இந்த விஷயங்களை ஸேவிப்பதில் சிற்சில நியமங்கள் சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ளன. நமது இஷ்டப்படிப்

பூராவாக விஷயங்களை ஸேவிக்கும்படி விட்டுவிட்டு அப்படி ஸேவிப்பதில் ஏதோ ஸ்வல்ப நியமங்களைச் சாஸ்திரங்கள் செய்கின்றன. நம்மால் சுலபமாய் அனுஷ்டிக்கக்கூடிய அந்த ஸ்வல்ப நியமங்களிலும் நமக்கு த்வேஷம் வந்து அவ்வித நியமங்களை உல்லங்கனம் செய்வோமானல் அதற்கு தக்ஷிணதிகதிபதியாகிய யமதர்மராஜன்தான் பதில் சொல்லுவார். அதாவது தகுந்தசிக்ஷை விதிப்பார்" என நீலகண்ட தீக்ஷிதரும் விளக்கியிருக்கின்றார். இவ்விதம் கெட்ட அர்த்த காமங்கள் அவிவேகிகளுக்கு நல்லதாகத்தோன்றுமெனவும் நீலகண்ட தீக்ஷிதரே

न्याय्या दर्थादपि किमधिकं लभ्यमुन्मार्गवृत्त्या
वैधादन्नादपि किमधिकं पर्युदस्तेषु भोज्यम् ।
भार्याभोगादपि भवति कः पण्यकान्तासु भोगः
प्रायो नेतिश्रुतिविषयता विश्वमाधुर्यहेतुः ॥

"சாஸ்திர விரோதமில்லாததும் சாஸ்திரத்தில் இன்ன இன்ன அதிகாரி இன்ன இன்ன உபாயத்தால் தனத்தை ஸம்பாதிக்கலாம்—என்று கூறப்பட்டதுமான நீதி தவறாத மார்க்கத்தால் ஸம்பாதிக்கப்படும் அர்த்தம் போறாமல் அதைவிட அதிகமாக சூது, களவு, வஞ்சனம், நிஷித்தத்தொழில், ச்வவிருத்தி, அதாவது நாய்த்தொழிலாகிய ஸேவை (அடிமை) முதலிய சாஸ்திரவிருத்த மார்க்கத்தால் ஜீவித்து என்ன பணத்தை வாரிக்கட்டிவிடப் போகிறோம். சாஸ்திரத்தில் இன்னார் இன்ன அன்னத்தைப் புஜிக்கலாமென்று கூறப்படும் அன்னத்தைப் புஜித்து பசி நிவிருத்தியை அடையாமல் அதைவிட அதிகமாக சாஸ்திர நிஷித்தங்களான மது,மாம்ஸம், கிளப்புகளில் விற்கப்படும் பக்ஷயம் முதலிய பதார்த்தங்களைப் புஜித்து என்ன க்ஷுந்நிவிருத்தியை அடையப் போகிறோம். விதிப்படி பாணிக்ருஹீதையான பார்யையின் போகத்தில்அடையாத என்னவைஷயிகசுகத்தை அதிமாகப்பாதாரம்வேச்யை முதலியவர்களுடைய போகத்தில் அடையப்போகிறோம். ஒன்றுமில்லை. அப்படியிருந்தும் அவிவேகிகள்நிஷித்த அர்த்தங்களையும், போஜ்யங்களையும் ஸ்திரீகளையும் அனுபவிக்க முயற்சிக்கின்றார்கள். அப்படி அவர்களுக்குக்கெட்ட அந்த வஸ்துக்கள் மதுரமாகத்தோன்றி அவைகளில் ப்ரவிருத்தி உண்டாவதற்குக் காரணம் அநேகமாய் அவ்வித விஷயங்களை நிஷேத சாஸ்திரங்

கள் தடுத்திருப்பதுதான். எவ்விதம் குழந்தைகள்—“இங்கே போகாதே இன்னகார்யத்தைச்செய்யாதே” என்று பெரியோர்கள் தடுத்தால் “இங்கே போகாதே—இதைச்செய்யாதே என்கிறாரோ இதில் ஏதோ ஒரு விசேஷமிருக்கிறது. இங்கேபோய்ப் பார்ப்போம். இதைச் செய்துபார்ப்போம்” என்று எண்ணி பெரியோர்களை அலக்ஷ்யஞ்செய்து ப்ரவிருத்திக்கிறதுகளோ, அப்படிப் ப்ரவிருத்தித்துப்பிறகு கஷ்டத்தை அனுபவிக்கிறதுகளோ, அவ்விதம் பாலர்களையொத்த அவிவேகிகளும் சாஸ்திரங்கள் எதைச்செய்யாதே என்று தடுக்கின்றனவோ அக்கார்யத்திலேயே—“இதில் ஏதோ விசேஷமிருக்கிறது. இதைச்செய்து பார்ப்போம்” என்று அதை மதுரமாக எண்ணிப் ப்ரவிருத்திக்கிறார்கள். அப்படிப் ப்ரவிருத்தித்துப்பிறகு நரகாதி கஷ்டங்களையும் அனுபவிக்கிறார்கள். சாஸ்திரங்கள் தடுக்காமலிருந்தால் ஒரு ஸமயம் அதில் ப்ரவிருத்திக்காமல் இருப்பார்களோ என்னமோ. சாஸ்திரம் தடுத்ததே அது மதுரமாக அவர்களுக்குத் தோன்றுவதற்குக்காரணம்” என்னும் சுலோகத்தில் கூறியிருக்கின்றார்.

चिन्तामपरिमेयाञ्च प्रळयान्तामुपाश्रिताः ।
कामोपभोगपरमा एतावदिति निश्चिताः ॥
आशापाशशतैर्बद्धाः कामक्रोधपरायणाः ।
ईहन्ते कामभोगार्थमन्यायेनार्थसञ्चयान् ॥

“காமக்ரோத லோபாதி ஆஸுரஸம்பத்தை அவலம்பித்த மனுஷ்யர்கள் ப்ரளயத்தையே அதாவது மரணத்தையே தனது சிந்தைக்கு முடிவாய்க்கொண்டு அதாவது மரணபர்யந்தம் இடைவிடாமல் யாவஜ்ஜீவம் அளவற்ற யோகக்ஷேம சிந்தையையே பண்ணிக்கொண்டு, அல்லது இன்றைக்கோ நாளைக்கோ மரிக்கப் போகின்ற சரீரத்தின் நிமித்தமாக அவ்வேகத்தால் ப்ரும்மப்ரளயபர்யந்தமான யோகக்ஷேம சிந்தையைப்பண்ணிக்கொண்டு, அல்லது

बङ्गाः कथ भङ्गाः कथमित्यनुयुक्ते वृथा देशान् ।
कीदृक्कृतान्तपुरमिति कोपि न जिज्ञासते लोकः ॥

"வங்கதேசமெப்படி? அங்கதேசமெப்படி? சென்னையில் என்ன ஸமாசாரம்? லண்டனில் என்ன ஸங்கதி? என்று வியர்த்தமான தேச ஸமாசாரங்களை

काकस्य कति वा दन्ता मेषस्याण्डं कियत्पलम् ।
कंबले कति रोमाणि का वार्ता चोळमण्डले ॥

"காக்காய்க்கு எவ்வளவு பற்கள்? ஆட்டினுடைய அண்டம் எவ்வளவு பலமிருக்கும்? கம்பளத்தில் எவ்வளவு ரோமங்கள் இருக்கின்றன? சோளதேசத்தில் என்ன ஸமாசாரம்ஸார்" என்று ஒருவர்க்கொருவர்கேட்டுகொண்டும இவ்வித வீண்சமாசாரங்களையேபெரும்பாலும் பிரசுரப்படுத்தும தினஸரி பத்திரிகை வாரப்பத்திரிகை முதலிகளை வெகு கர்ம சிரத்தையுடன் ஏராளமான பணத்தைக்கொட்டி வாங்கித்தானே நிஷ்டை கலையாது படித்துக்களித்துக்கொண்டும் வீணுகக்காலம் கழிக்கிறது பாமர உலகம். இவ்வித தேச ஸமாசாரங்களின் மத்தியில் கிருதாந்தபட்டணத்தின் அதாவது நாம் மரித்தபிறகு நாம்செய்த பாபத்தின் பலனை அனுபவிப்பதற்காகப் பரமேசுவரனுல் ஏற்பட்டிருக்கும் யமதர்மராஜனுடைய நகரத்தின் ஸமாசாரம் என்ன? யார் யார் என்னென்ன பாபத்திற்காக என்னென்ன தண்டனைகள் அனுபவிக்கிறுர்கள்? நாம் அங்குபோய் என்ன சிக்ஷையை அனுபவிக்கும்படிநேருமோ? நாம் என்ன பாபத்தைப் பண்ணியிருக்கோம்? அதற்குப் பரிஹாரம் ஏதாவது உண்டா? என்பது முதலிய ஸமாசாரங்களைப் பெரியோர்கள் மூலம் கேழ்க்கவும், அவச்யம் அறியவேண்டிய அந்த ஸமாசாரங்களை விசேஷமாய் அறிவிக்கும் சுருதிஸ்மிருதிஇதிஹாஸ புராணுகமாதிகளான ஸநாதனப் பத்திரிகைகளையும், அதன் ஸாராம்சங்களை வெகு இலகுவாய் எல்லோரும் எளிதில் அறியுமாறு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளான ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் அவர்களின் அவ்யாஜ கருணையை முன்னிட்டு குருவாரந்தோறும் குருபதேசம்போல் வெளிவரும் ஆர்யதர்ம பத்திரிகையையும் படித்துத்தெரிந்துகொள்ளவும் ஒருவராவது பிரவிருத்திக்கமாட்டேனென்கிறுர்கள்" என்றும்,

छाया तोयं वसनमशनं वाहनं दीपिका वा
केवं यस्मिन् किल न सुलभं किञ्चिदप्येषु मर्त्यैः ।

तस्मिन् दूरे पथि तनुभृतां सर्वथैवाभिगम्ये
प्रस्थानार्हं कमपि तु विधिं घस्मरा न स्मरामः ॥

,'நிழல், நீர், வஸ்திரம், சாப்பாடு, வாஹனம், விளக்கு முதலிய ஸாமக்ரீகளுள் ஒன்றாவது மனுஷ்யர்களால் எந்த மார்க்கத்தில் விலைக்குவாங்கமுடியாதோ! அப்பேர்ப்பட்டதும், வெகு தூரமானதும் மனுஷ்யர்களால் எவ்விதத்திலும் கட்டாயம் போகக்கூடியதுமான யமலோகமார்க்கத்தில் அதிக சிரமமில்லாமல் நாம்நடந்து போவதற்கு யோக்யமான ஏதாவதொரு சாஸ்திரீயமார்க்கத்தைக் கூட கேவலம் உதரம்பரிகளாய் வயிற்றை நிரப்புவதே பிரதானமெனக்கொண்டு நாம் கவனிக்கிறதில்லை.'' என்றும்

गन्तव्योऽध्वा सकलदुरवस्थानसंपातभूमि
गत्वा द्रक्ष्यस्त्रिभुवनजनायुष्कलान्तः कृतान्तः ।
दृष्ट्वा लभ्या निरयजनिता यातना नैकभेदा
विस्मृत्येदं निखिलमपि तु व्यर्थमायुर्नयामः ॥

"நம்மால் ஸகலமான துரவஸ்தைகளையும் அடைவதற்கு இடமாயுள்ள ஓர் யமலோக மார்க்கம் நடக்கவேண்டியதுண்டு. அந்த மார்க்கத்தால் நடந்துபோய் மூன்று உலகத்து ஜனங்களுடைய ஆயுஷ்காலத்தை முடிக்கும் யமதர்மராஜனைப் பார்க்கவேண்டும். அவ்விதம் அவரைப்பார்த்து அவரது ஆஜ்ஞையால் நரகத்தில் ஏற்படுகிற பலவிதயாதனைகளை அடையவேண்டியதுண்டு. இதெல்லாவற்றையும் மறந்து இதற்குப் பரிஹாரங்களைத்தேடாமல் நாம் ஆயுஸ்ஸை வியர்த்தமாகக்கழிக்கிறோம்'' என்றும் நீலகண்டதீக்ஷிதர் கூறியவாறு பிரளயத்திற்கு அதாவது மரணத்திற்குப்பிறகு பரலோகத்தில் ஏது எப்படி ஏற்படும் என்பது முதலிய ஆவச்யக சிந்தையை விட்டுவிட்டு மரணபர்யந்தமேயுள்ள யோகக்ஷேம சிந்தைகளையும், அதிலும் வியர்த்தமாயுள்ள ஊர் வம்புகளையும், சிந்தித்துக்கொண்டு காமபோகத்தையே பரமபுருஷார்த்தமாகநினைத்துக்கொண்டு இஹலோகத்தில் அனுபவிக்கும் அர்த்தகாமங்களைத் தவிர வேறு பரலோகம் முதலியது கிடையாது. இவ்வளவுதானென்று சார்வாக மதத்தை அவலம்பித்து நிச்சயம்செய்துகொண்டு அனேகம் ஆசாபாசங்களால் கட்டப்பட்டு காமக்ரோத பூயிஷ்டர்களாய்க் கெட்ட காயங்களை அனுபவிப்பதற்காக அன்

யாய மார்க்கத்தால் ஏராளமாகப் பணக்குவியல்களைக் குவிப்பதற்காக யத்தனம் செய்கின்றார்கள்'' என்று கீதையிலும் பகவான் கூறி யிருக்கின்றார். இவ்விதம்கெட்ட அர்த்தகாமங்கள் அவிவேகிகளுக்கு நல்லதெனத் தோன்றினாலும் விவேகிகளான மனுஷ்யர்கள் அதுகளிலுள்ள தோஷங்களை அறிந்தவர்களானபடியால் அதுகளைக் கெட்டதென அறிந்து ஆசைப்படமாட்டார்கள், ஆகையால் அவ்வித அர்த்தகாமங்கள் புருஷார்த்தங்களாக ஆகமாட்டாது. புருஷார்த்தம் என்னும் பதத்தில் அடங்கியிருக்கும் புருஷ பதத்திற்கு விவேகியான புருஷன்தான் அர்த்தம். ஆகையால் விவேகியான புருஷனால் ஆசைப்படக்கூடியதுதான் புருஷார்த்தமாகும். அவ்விதமில்லாமல் அவிவேகி ஸாதாரணமாய் புருஷபதத்திற்கு அர்த்தங்கூறினால் தேனும் விஷமும் கலந்த மதுரமான அன்னம், இதில் விஷங்கலந்திருக்கிறது, என்று விவேசனம் செய்து அறியாத அவிவேகிகளான புருஷர்களால் ஆசைப்படப்பட்டு அதுவும் புருஷார்த்தமென ஒப்புக்கொள்ள வேண்டிவரும். அது எவ்விதம்விவேகிகளால் ஆசைப்படத்தகாதபடியால் புருஷார்த்தமாகிறதில்லையோ அவ்விதமே சாஸ்திரநிஷித்த அர்த்தகாமங்களும் விவேகிகளால் ஆசைப்படத்தகாதபடியால் புருஷார்த்தமாகிறதில்லை. சாஸ்திரவிருத்தமான அர்த்தகாமங்களை ஸேவித்தால்தான் அந்தக்காணம் சுத்தமாகி ஞானதுவாரா முக்தியைப் பெறலாமென "ராகதுவேஷாதிதோஷங்களோடு ஸம்பந்தப்படாத சாஸ்திரவிரோதமில்லாத விஷயாநுபவத்தால் அந்தக்காணம் சுத்தமாகின்றது. அந்தக்காணம் சுத்தமாகும்போது உண்மையான விஷயத்தைக் காட்டும் அறிவு-மற்ற அறிவுகளால் கலக்கப்படாததுதொடர்ச்சியாய் உண்டாகிறது. அவ்வித உண்மைஅறிவு உண்டாகும்போது ஸகலமான கிரந்திகளும் அதாவது அனர்த்த பாசங்களும்விலகிப் போகின்றன'' என்னும் கருத்தைவிளக்கும் சாந்தோக்யோபனிஷத் வசனமும் கூறுகின்றது.

धर्माविरुद्धो भूतेषु कामोऽस्मि भरतर्षभ ।

"ஹே அர்ஜுன! தர்மசாஸ்திர விரோதமல்லாத பத்னி புத்ராதி விஷயமான காமமாக நான் இருக்கின்றேன். தர்மா விருத்தமான காமத்தை எனது ஸ்வரூபமாக பாவனைசெய்'' என்று கீதையிலும்

பகவான் தர்மவிருத்தமான காமத்தை விலக்கி தர்மாவிருத்தமான காமத்தையே சிலாக்யமாகக்கூறியிருக்கிறார். இவ்விடத்தில் தர்ம பதமானது அர்த்தத்திற்கும் உபலக்ஷணம். அதாவது தர்ம விரோதமில்லாத அர்த்தமாகவும் நானிருக்கிறேன் என்று சொல்லுவதிலும் கருத்து. ஆகவே புருஷார்த்தங்களின் கிரமம் குறிப்பிட்டது மிகப்பொருத்தமுடையதே. நல்ல புருஷார்த்தங்களையே நாடி யாவரும் நன்மை பெறுவாராக.

போலகம் சு. ஸ்ரீராமசாஸ்திரி.

---

# நடேசஸ்துதி.

(678-வது பக்கத்தொடர்ச்சி)

यः क्रोधान्ध कृतान्तगर्वहरणप्रख्यापितेष्टापत
त्कष्टापाकरणो विभाति जगतीसंरक्षणार्थं प्रभुः ।
रत्नाधारतुषारशैलसुकृतव्यूहोत्थदेवापगागौरीशं
तमहं व्रजामि शरणं श्रीचित्सभानायकम् ॥११॥

மிகக்கோபங்கொண்ட யமனுடைய கர்வத்தையடக்கி மார்க்கண்டன் முதலான பக்தர்களுடைய கஷ்டங்களை நிவர்த்தி செய்கிறவரும், ஜகத் ஸம்ரக்ஷண நிமித்தம் திவ்யமங்கள மூர்த்தியாய் பிரகாசிக்கிறவரும், ஹிமவானுடைய பூர்வபுண்ய சமூஹத்தால் உண்டான கங்கா கௌரீ தேவிகளின் நாயகரூபமான திருச்சிற்றம்பல நாதனைச்சரணமடைகிறேன். (11)

संख्यातीत भवार्जिताघनिचयप्रध्वंसि पादेक्षणो
द्युक्तानम्रसमस्तलोकजनताकैवल्यदित्सोद्भवं
वाणीजानिमुखामरेन्द्रनिवहाशास्या शयावेदकं
नित्यानन्दरसावहं सुनटनं न श्शांभवं त्रायताम् ॥१२॥

அநேக ஜன்மாக்களில் சம்பாதிக்கப்பட்ட பாபசமூகங்களை நாசஞ் செய்கிற திவ்ய சரண தர்சனத்தில் முயற்சியுடைய பக்த ஜனங்களுக்கு முக்தியளிக்கும் நிமித்தம் உண்டானதாயும், பிரமதேவர்

முதலான தேவசமூகத்தால்பிரார்த்திக்கத்தக்கஞானவிசேஷத்தை போதிக்கிறதாயும்.நித்யாநந்தரஸத்தைத்தருகிறதாயும்உள்ளசங்கானுடைய திவ்ய நடனமானது நம்மைகாத்தருளல் வேண்டும். (12)

तव शिव महिमानं वेत्ति को वा जगत्यां
निखिलनिगमवाणी गूढमानन्दरूप ।
निहतदुरितजालैः आत्मकामैर्महत्वं नटवर कृपया ते बुध्यते सर्वरूप ॥

ஓ! ஆனந்தரூபியான பரமசிவனே! சமஸ்தவேத சாஸ்திரங்களில் மறைந்திருக்கும் உன்னுடைய மகிமையை எவனறிகிறான். சர்வாத்மஞன ஓ!நடனபதியே! உன்னுடைய கிருபையால் நாசஞ் செய்யப்பட்ட பாபசமூகத்தை உடையவர்களான ஆத்மதர்சனத்தையே விரும்புகிற மஹர்ஷிகளால் உன்னுடைய பெருமை அறியப்படுகிறது. (13)

स्वामिन् शब्दनये नचास्मिनिपुणः तस्मास्तुतौ दोषभाक्
काव्यालंकृतिवृत्तबोधविकलः तन्मे वचो गर्हितम् ।
वय्यन्ते कुशलो नचास्मि तदहं तत्वं त्वदीयं परं
जाने नापि जडःस्तवं तु कलयान्निन्द्योस्मिनाहं कथम् ॥१४॥

ஓ நாதனே!நான் வியாகரண சாஸ்திரத்தில் சமர்த்தனில்லாததால் ஸ்தோத்திரத்தில் பததோஷங்களை அடைவேன். காவ்யாலங்காரவிர்த்தஞானமில்லாததால் என்னுடைய ஸ்துதி வசனம் ரஸமில்லாமலிருக்கும், வேதாந்த சாஸ்திரத்தில் நிபுணனில்லாததால்உம்முடைய உண்மை ஸ்வரூபத்தை அறியவில்லை. ஆதலால் உம்மை ஸ்தோத்திரஞ்செய்யும்மூடனானநான்என்னிந்திக்கப்படமாட்டேன்

नाथ त्वद्विषयप्रबन्धनिवहाः सन्त्यत्र सर्वार्थदाः
त्वद्भक्तेन्द्रविनिर्मिता स्तव बुधव्यूहस्य चानन्ददाः ।
कर्तु तादृशसन्नुतिं नटपते मन्दः कथं शक्नुयां
किन्त्वालंब्य कृपां तवाद्य विनुतिर्भक्त्येयमातन्यते ॥१५॥

ஓ! நாத! பண்டித ஜனங்களுக்கு ஆமோதத்தைத்தருகிற அப்பைய தீக்ஷிதர்கள் முதலான மஹாபக்த சிகாமணிகளால் செய்யப்பட்ட உம்முடைய ஸ்தோத்திர கிரந்தங்கள் அனேகங்கள் அதிரஸவத்துக்களாக இருக்கின்றன. அவ்விதம் ஸ்தோத்திரஞ்செய்ய சமர்த்தனல்லாத மூடனான நான் உம்முடைய கிருபையை அவலம்பித்து பக்தியினால்மட்டும் ஸ்துதி செய்கிறேன். "स पूर्वेषामपि

गुरुः कालेनानवच्छेदात् "அந்த பரமசிவன் முன்னோர்களுக்கு குரு கால அளவில்லாததால்" என்கிற பதஞ்சல யோகசாஸ்திரப்படி ஆதிகுருவான சங்கரனுடைய பக்தியினாலேயே சகல சாஸ்திரார்த்தங்களையறிந்தவனாகுவன், இவ்விதமே ச்வேதா ச்வதா உபநிஷத் முங்கூறுகிறது. "ஈசனிடத்திலும் குருவினிடத்திலும் எவனுக்கு உயர்ந்த பக்தி இருக்கிறதோ' அவனுக்கு படித்த படியாதசாஸ்திரார்த்தங்கள் பிரகாசிக்கின்றன" என்று இவ்வாறே அப்பய்ய தீக்ஷித சாணும் போதிக்கின்றார்கள்.

नाहमधीती वेदे नच पठिती यत्रकुत्रचिच्छास्त्रे ।
किन्तु दरेन्दुवतंसिनि पुरहिंसिनि पुंसि भूयसी भक्तिः ॥

நான் வேதமறியேன் யாதொரு சாஸ்திரமுமறியேன் சந்திரசூடனான திரிபுர சம்ஹாரியான புருஷோத்தமனிடத்தில் பெரியபக்தி மட்டுமுள்ளவன் என்று. ஆதலால் பக்திரூப சாதனத்தால்மட்டும் ஸ்துதிசெய்கிறேன். என்று ஸ்துதிகர்த்தா நிரூபிக்கின்றார். (15)

(தொடரும்)

சிதம்பரம் ராஜா சோமசேகரதீக்ஷிதர்.

---

# ஓர் கண்டனக்கூட்ட விளம்பரம்.

9—8—31.ல் கோவல் வீரட்டானம் ஆரியதர்மாபிவர்த்தினி பிராம்மண மகாஸபையில் ஓர்கூட்டம் கூடிற்று. அதில் ஷெ சபையாரால் சாரதாசட்டமானது ஸநாதநமதத்திற்கு மிகவும் விரோதம் என்று கண்டித்து வரப்போகும் டில்லிஸபையில் ராவ்பகதூர் கிருஷ்ணமாச்சாரியாரால் கொண்டுவரும் மசோதாவை ஆதரிப்பதோடு இதரர்களால் கொண்டுவரும் ஸநாதநமதத்திற்கு அனுகூலமான எல்லாமசோதாவையும் ஆதரிப்பதாயும் தீர்மானம் ஏகமனதாய் நிறைவேற்றி ஷெ தீர்மானத்தின் காப்பிகளையும் அதை ஒட்டியே ஸ்திரீகளுடைய கூட்டத்தின் தீர்மான காப்பிகளையும் அநேக மகாஜனங்கள் கையொப்பமிட்டும் ஸ்திரீ தீர்மான காப்பிகளில் அவர்களால் கையொப்பமிட்டும் ஷெ இருகாப்பிகளிலும் ஒவ்வொன்றுவைத்து மேன்மைதங்கிய வைசிராய்க்கும் ஸர். ஸி. பி. ராமஸ்வாமிஅய்யர் முதலிய எழுமெம்பர்களுக்கும் அனுப்பப்பட்டது. எல்லாம்வல்ல இறைவன் நமது நோக்கத்தை பூர்த்திசெய்விப்பாராக.

S. ஸ்ரீநிவாஸசாஸ்திரி

# கங்காவதரண தத்துவம்.

## 4-வதுஸர்கதத்துவம்

### சங்கர ஸாக்ஷாத்கராம்

கங்காவதரணம் 4-வதுஸர்ககத்தில் 1-முதல்.34. வரை தவத்தின்மேன்மையும் ஹேமந்தகாலச்சிறப்பும் வெகுசாதுர்யமாய் வர்ணிக்கப்பட்டது. அதன்பிறகு பகவத்பிரஸாதத்திற்கு அடையாளமான ஸ்வப்னம் ,3,ச்லோகங்களால் கூறப்பட்டது. மறுபடியும் [70-ச்லோகம்முடிய, பிரமதகணங்களால் அறிவிக்கப்பட பரமேசுவரன், உமாஸகிதராய், அயன், ஹரி,முதலான தேவர்களையும் முன்னிட்டுக்கொண்டு பகீரதனுக்குமுன்பிரஸன்னமானார் என்று விவரிக்கப்பட்டது. பிறகு பகீரதன் வேதங்களாலேயும் அறியக்கூடாதவரான தேவதேவரைக்கண்டு பயத்தாலும் ஆச்சர்யத்தாலும் பரபரப்படைந்து ஒன்றுந்தோன்றாதவனாய் பகவத்கடாக்ஷவீக்ஷணத்தால் சிறிது தைர்யமடைந்து அவரை வலம் சுற்றிவந்து பாக்கியம்வாய்ந்த சிரஸ்ஸை அவரது பாதபங்கயத்தில் வீழ்த்தி எழுந்து புஷ்பங்களால் அர்ச்சித்துத் துதிக்கலானான்.

कायं काशंभु स्तदपि स्तोतुं समुपचक्रमे ।
नहि वस्तुकृता प्रीतिः स्वशक्तिमनुरुध्यते ॥
त्वङ्कृति स्त्वन्मयं विश्वं मिति साधारणी स्तुतिः ।
अस्तुतिस्त्वयि युक्ता तदवाङ्मनसगोचरे ॥
गुणं सन्त मसन्तं वा कीर्तयेद्यदि सा स्तुतिः ।
गृण्हन्गुणैकदेशं ते क इव स्तावको जनः ॥
सर्वज्ञ शङ्कराभिख्यासमावेदितवैभवात् ।
त्वद्दते किं परब्रह्म सच्चिदानन्दलक्षणम् ॥
त्वत्प्रसूतो हरि र्यावत्त्रय्यन्तै रुपवर्ण्यते ।
तावत्प्रभावं भवत स्तर्कयन्ति मनीषिणः ॥
त्रिमूर्तिजननी तुर्या यामूर्ति र्विहितास्ति सा ।
यदि ते यदि वाऽन्यस्य तन्मे ब्रह्मास्ति किं क्षत ॥
धर्मधर्मिभिदापन्नं चैतन्यं यदि मायया ।
जातौ तदेव हि युवां जगदादिमदंपती ॥

இந்த பகீரதன் எங்கே? சம்பூ எங்கே? அப்படியாயினும் துதிக்கத் தொடங்கினன் ஒருவன் ஒருவஸ்துவினிடம் ப்ரீதிவைத்து விட்டால் தனது சக்தி குறைவுபட்டிருந்தாலும் அதைக்கருதி, குறிப்பிட்டகாரியத்தைச் செய்யாமல் நிற்கிறதில்லை. நீரே யாவருக்கும் கதியாகிறீர். உலகமே உனது ஸ்வரூபம் என்று வேதம் முறையிடுகிறது. ஆதலால் வாக்கிற்கும் மனதிற்கும் எட்டாதவான உம்மைத் துதிக்காமலிருப்பதே உசிதமானது. இருப்பதையோ இல்லாததையோ ஒரு குணத்தைப் புகழ்ந்தால் அது துதியாகும். உமது குணங்களில் சிறுபான்மையை எடுத்துரைக்கிறவன் எவன்தான் துதிக்கிறவனுவான். ஸர்வக்ஞன் சங்கான் என்ற திருநாமங்களாலே வைபவத்தை தெளிப்படுத்துகிற உம்மைக் காட்டிலும் ஸத், சித், ஆனந்தம் என்ற இலக்கணம் வாய்ந்தபாம் பொருள் எது? உம்மால் படைக்கப்பட்ட ஹரி வேதாந்தங்களால் எவ்வளவு வர்ணிக்கப்படுகின்றுரோ அவ்வளவு வைபவமும் உமக்கே உரியது என்று வித்வான்கள் கருதுகிறுர்கள். எந்த மூர்த்தி மும்மூர்த்திகளையும்உண்டாக்குகின்றது என்று பிரசித்தி பெற்றிருக்கிறதோ அம்மூர்த்தி உம்முடையதாயிருந்தாலும் அல்லது மற்றவருடையதாயிருந்தாலும் ஸரி, அதனுல்என்னுல் கூறப்படுகின்ற பிரமம் குறைவுபடுகிறதா என்ன. மாயாஸம்பந்தத்தால் தர்மம் என்றும் தர்மி என்றும் சைதன்யம் பேதப்பட்டால் அப்போது நீங்கள் உலகத்திற்கு ஆதி தம்பதிகளாகிறீர்கள்,

कैवल्योपनिषद्दुष्टं यदिदं रूपमीश ते ।
संनिधत्तां सदा देव संस्मरामि यदा यदा ॥

ஓ' பாமேச்வா? யாதொரு உனது இந்த ரூபம் கைவல்யோபநிடதத்தால் கோஷிக்கப்படுகிறதோ; அந்த ரூபத்தை எப்போது எப்போது நான் நினைக்கிறேனே அப்போதப்போது அந்த ரூபம் எனக்கு புலப்படட்டும்—என்று வேதாந்த சித்தாந்தத்தைப் பொழிகின்ற வசனோபன்யாஸங்களால், பகீரதனுல் துதிக்கப்பட்ட பாமேச்வான் கருணைபுரிந்து குழந்தாய்? வேண்டியவரனைக் கேட்டுக்கொள்—என்று அவனைப்பார்த்துக்கூறவே பகீரதன் பிதாவே? கங்கையைத் தவத்தாலாராதித்தேன் பூமியில் தன்னைத் தாங்கிவிடுவதற்குத் திறமையுள்ள புருஷனையழைத்துவா? என்று அவள் பகர்ந்தாள். ஹாலாஹலத்தையனுயாஸமாய் உட்கொண்ட

தாங்களே இக்கார்யத்தை ஏற்றுக்கொண்டு எனக்கு அருள்புரிய வேண்டும் என்றான். உடனே பகவான் "அபிஷேகப்பிரியனான எனக்கு உனது வேண்டுகோள் விருப்பத்தக்கதே" என்று சொல்லி விடபத்திலிருந்து கீழிறங்கி அவனுக்கு முன்புள்ளஸ்படிக சிலாதலத்தில் உட்கார்ந்தார். அப்போது பாலகர்களான கணபதியும் சுப்ரம்மண்யனும் பக்கத்தில் வரவே அவர்களை விலகச் செய்து புலித்தோலையுடுத்தி தீரத்தன்மையுடன் பூமியில் நின்றார்.

உடனே நந்திதேவர், அஹங்காரத்துடன் ஆகாயகங்கை விழுவதைத் தாங்குவதற்கு உசிதமாயிருக்கும்படி ஸர்ப்பராஜனால் கட்டப்பட்டிருக்கின்ற சடைகளை அவிழ்க்கவே ஸஹோதரி வரப் போகின்றாள் என்றவாவோடு உமாதேவியும்) அவ்வாச்சர்யத்தைப் பார்க்க விருப்பத்தோடுபிரமதகணங்களும், தனது மனோபீஷ்டம் நிறைவேறுவதால் அதிக அவாகொண்ட பகீரதனும் அவ்வித மான அவஸ்தையோடு கூடின சிவபெருமானை ஏகாந்தமாய் கண் குளிரப் பார்த்தனர்.

பின்பு

बद्धस्रस्त कपर्द कन्दर पतद्भोगीन्द्र चन्द्राङ्कुर -
क्षेपव्यापृत नन्दिदृष्टिवलन व्याधूत दिग्भित्तयः ।
सावष्टम्भ महेश संभ्रम परित्रस्यत्त्रिलोकस्तुताः
पारे मद्वचसाममर्त्यतटिनी झंपात पूर्वक्षणाः ॥

கட்டவிழ்த்த ஜடாஜூடத்திலிருந்து விழுகிற ஸர்ப்பராஜன் சந்திரன் இவர்களை எடுத்தெரிவதில் வியாபரித்த நந்திதேவரின் பார்வைகள் விழுவதால் கலங்கின திசைகளையுடையவைகளும், தைரியத்தோடு நிற்கின்ற பரமேசுவரனின் பரபரப்பினால் அச்சமுற்ற மூவுலகங்களாலும் துதிக்கப்பட்டவைகளாயுமுள்ள தேவகங்கை பிரவஹிக்குங்காலையில் ஏற்பட்ட பூர்வக்ஷணங்கள் எனது வாக்குகளால் வர்ணிக்க இயலாதவைகளாயிருக்கின்றன என்று கவிமணி உபஸம்ஹரிக்கிறார்.

சங்கரஸாக்ஷாத்காரம் என்ற நான்காவது ஸர்க்கத்தின்
தத்துவம் முற்றிற்று.

प्रान्तसंक्रमिततारया दृशा पश्यति त्रिपुरशासने ततः ।
अस्मरत्सुरनदीमहंकृतां ध्यानयोगविधिना भगीरथः ॥

பிறகு த்ரிபுராரியான சிவபெருமான் கருவிழியை ஓரமாகச் சாய்த்துக்கொண்டு ஒரு கண்ணால் பார்க்கும்போது பகீரதன் மனதை நிலை நிறுத்தி அஹங்காரங்கொண்ட தேவநதியை ஸ்மரித்தான்.

உடனே மிகுந்த பரபரப்புடன் அவ்வாகாயகங்கை வெகு காலமாக தடைப்பட்டிருந்ததால் லஜ்ஜைகொண்டிருந்த அலைகளின் கூட்டத்தை ஸஜ்ஜஞ் செய்துகொண்டாள். தான் வெளிக்கிளம்புவதைத் தெரியப்படுத்துவதற்காக பிரம்மதேவரின் அருகில் வந்து அக்கங்கை அடக்கமில்லாமையால் தெளிவாகத் தெரிகின்ற கர்வத்தின் மேம்பாட்டால் சூடுண்ட வார்த்தைகளைச் சொல்லலானாள்.

आस्ति नन्वय मयुग्मलोचनः स्फटिकाचलचरो वनेचरः ।
धर्तुमिच्छति स नाम मामकं त्वत्परीक्षितमहारयं पयः ॥
स प्रकामजरठो गुरुः पिता सा च मुग्धहृदया यवीयसी ।
व्याहतो यदि न मे समुद्यमः क्व शिवः क्व इव राजतो गिरिः ॥
त्वद्गृहे स्थितवती चिरादहं त्वामनेन परितोषये ततः ।
त्वांच्छिरोल्लवनकर्म दुर्मदं संनिपात्य गिरिशं रसातले ॥
सावलेपनि पतन्मदूर्मितासंप्लुवैककबलीकृतो हरः ।
सङ्गतः पयसि शङ्खशुक्तिभिः र्नन्दिदा ननु गवेषयिष्यते ॥
कालकूटमिव मन्यते शिवो मामकं प्रकृतिदुर्मदं पयः ।
ब्रूहि तावदधुनापि भेति तं मा विषीदतु यवीयसी पुनः ॥
शङ्कितो जगदकाण्डविप्लवाद्याचते यदि भवानथापि माम् ।
तं मदम्बुवहनातिमानिनम् कञ्चिदेव शमयामि नापरम् ॥
कर्णयोर्यदि पतेयुरन्ततो गर्जितानि चलतां मदम्भसाम् ।
तत्वतः कथय किं भवेच्छिवस्त्वं हि तन्महिमलेशवेदिता ॥

ஒற்றைப்படைக் கண்ணனும் கைலயங்கிரியில் வாழ்கின்றனுவயுமுள்ள ஒரு வனவாஸி உண்டல்லவா. அவன் உம்மால் பரீக்ஷிக்கப்பட்ட மிகுந்த வேகத்தையுடைய எனது ஜலத்தை தரித்துக்கொள்வதற்கு இச்சிக்கிறான். அந்த எனது பிதாவான ஹிமவானே மிகவும் கிழவர் தங்கையோ பயந்த மனதுடையவள் எனது முயற்சி கெடாமலிருந்தால் சிவன் எங்கே கைலயங்கிரி எங்கே!

உமது கிருஹத்தில் நான் வெகு காலமிருந்திருக்கிறேன். ஆதலால் உமது தலையைக் கிள்ளினதால் மதங்கொண்டிருக்கிற சிவனைப் பாதாளத்தில் தள்ளிவிட்டு அதனால் உம்மைச்சந்தோஷிக்கச் செய்கிறேன். கர்வத்தோடு விழுகின்ற எனது அலைக்கூட்டத்தில் ஒன்றால் விழுங்கப்பட்டவனும் சங்கு சிப்பிகளுடன் ஜலத்தில் சேர்ந்துவிட்டவனுமான அரன், நந்தியால் தேடப்படப்போகின்றான். இயற்கையாகவே பயங்கரமான எனது ஜலத்தை காலகூடம்போலவே சிவன் நினைப்பானாகில் அவனிடம் இப்பொழுதும் வேண்டாம் என்றுசொல்லும், தங்கையோவெனில் (உமை) வருத்தமடையவேண்டாம். ஜகத்திற்கு அகாலத்திலேற்பட்ட பிரளயத்தால் தாங்கள் என்னிடம் சங்கைபட்டால், எனது பிரவாஹத்தை அவமதிக்கின்ற அந்த ஒருவனையே அடக்கிவிடுகிறேன், மற்றவனை அப்படிச்செய்பவில்லை. பெருகுகின்ற எனது ஜலப்ரவாஹத்தின் கர்ஜ்ஜனங்கள் செவிகளில் விழுந்தால், சிவன் உயிருடன் இருப்பானோ என்ன? நீர் உண்மையாகச் சொல்லும் நீரல்லவோ அவரது சிறிது மஹிமையை அறிந்தவர்.

என்று கங்காதேவியானவள் பிரம்மதேவரைப்பார்த்து கர்வத்துடன் சொல்லிவிட்டு அங்குகூடியுள்ள மற்ற தேவர்களைப் பார்த்துச் சொல்லத்தொடங்கினாள்—பயப்படாதீர்கள்; உங்களது பலபாக்ரமத்தின்பொருட்டு எனது ஜலம் வெட்கப்படுகிறது. ஓய் தேவர்களே நீங்கள் தங்கள் தங்கள் வீடுகளுக்குப்போய் சேருங்கள்; உங்களுக்குப் பார்ப்பதற்கு விருப்பமிருக்குமானால் பயமில்லாமல் திசைகளின் கோடியில் வஸியுங்கள் இவ்விதமான வார்த்தைகளால் அக்கங்காதேவியால் அச்சமுறுத்தப்பட்ட ஸுரர்கள், பினாகபாணியின் சமீபத்தையடைந்தனர். அவ்விதமான வார்த்தைகள் கல்லாலாக்கப்பட்ட எவனுடைய மனதையும் தான் கலங்கச்செய்யாது. கங்கையின் சொற்களைக்கூறுவதற்குயத் தனித்தவர்களும், தனதுதேஜஸ்ஸால்தப்பித்தவர்களுமான தேவர்களைக் கடாக்ஷித்து, சந்திரசேகரன் புன்னகைக்கொண்டார். கோபத்தால் கொஞ்சம் ஆழ்ந்த அடிகளை தூக்கிவைத்து, அந்த சபையிலிருந்து வெளிக்கிளம்பி, பகவான் ஸரஸ்ஸில் பிரவேசித்தார். கங்கையும் ஜகத்தை யாக்கிரமிக்க முயன்றாள்.

स्थापिताः कमलजन्मना पुरा सेतवः श्रुतिमयाः समन्ततः ।
सन्निपत्य सकृदेव संप्लुतैः रूर्मिभिस्त्वरितमुल्लङ्घिरे ॥

முன்னால் பிரும்மதேவரால் நாற்புறமும் ஸ்தாபிக்கப்பட்ட வேத மயங்களான ஸேதுக்கள் ஒரேதடைவிலேயே நெருங்கி தாவி விழுகின்ற அலைகளால் விரைவில் தாண்டப்பட்டன.

प्राणिनां प्रतियुगान्तमर्णवै र्यामकल्पयत पद्मभूर्दशाम् ।
सैव तस्य फलिता तदा तया कर्मणः क इव नाश्नुते फलम् ॥

பிரம்மதேவர் யுகங்கள் முடியுந்தோறும் பிராணிகளுக்கு சமுத்தி ரங்களால் யாதொரு அவஸ்தையைக் கல்பித்தாரோ அதே அவஸ்தை, அப்போது அவருக்கே பலித்துவிட்டது; யார்தான் கன் மபயனை அனுபவிக்கிறதில்லை?

கிரமமாக கங்காதேவி விரைவாகப்போகும்போது, முனிவர் கள் வானவர்கள் முதலியயாவரும், பயந்து கூக்குரலிட்டார்கள் பிரமனின்பத்தினியான சாரதாதேவியும், விரைவாய் எழுந்து நின்று, புஸ்தகங்களைமட்டிலும் கையில் ஜாக்கிரதை செய்து கொண்டு, ஒருகணநேரத்தையும் யுகம்போல் கருதினாள்.

विश्वसर्गचतुरोऽपि पद्मभूः न प्रतिव्यधित तत्र किञ्चन ।
स्वैरमस्तु कुशलः परापदि स्वापदि त्वकुशलोऽखिलो जनः ॥

உலகங்களைப் படைப்பதில் வல்லமைவாய்ந்தபோதிலும் அதற்குத் தடைசெய்வதற்கு பிரமதேவனால் சிறிதும் சாத்தியப் படவில்லை; பிறருக்கு ஆபத்து நேருங்கால், யாரும் சமர்த்தராய் தன்னிஷ்டம்போல் இருப்பான். தனக்கு தீங்கு விளையும்போதோ வெனில் எல்லாஜனங்களும் சாமர்த்தியமில்லாதவர்களாகவே ஆகின்றனர்!

இம்மாதிரி ஸத்தியலோகத்தில் பிரவாகிக்கும்போது, கங்கை யைத்தடுக்க அயன் சங்கடப்படவே பக்கத்து பரிஜனங்கள் உமது தவத்தின்வலிமையால், இந்த ஆபத்திலிருந்து விடுவிக்கப் பட்டோம் என்று துதிக்கும்போது வெட்கமடைந்தார்;

कः स्तुतेरपि वधोऽभिषङ्गिणः ரோஷமுள்ளவனுக்குஸ்துதியைக் காட்டிலும் வதம் வேறு என்ன இருக்கின்றது. வீட்டுச் சுவர் களில் எங்கும் நுரைகளுடன்கூடின நீர் அலைகள் மோதவே, பெருமூச்சுவிட்டுக்கொண்டு, முகம் குனிந்தவண்ணமாய் வருந் தின கண்ணால் பிரமன் அதைப்பார்த்தார். அக்கினி தேவதாக மான மந்திரத்தை ஜபிக்காமலிருந்துவிட்டேனே! நாற்புறமும்

கரைகளை கட்டாமலிருந்துவிட்டேனே? என்று வெள்ளம்பெருகிக் கிரமமாய் தணியும்போது பிரமன் யோசிக்கலானார். सा किलप्रकृति रग्रजन्मनाम् । பார்ப்பனருக்கு பின்புத்தியென்பது இயற்கையே, பிறகு ஸத்யலோகத்தைவிட்டுப் புறப்பட்டு கங்கா தேவி அலைகாற்றுகளால் யாவரையும் விரட்டிக்கொண்டு, இந்திரலோகத்திற்கு பயணமானாள், 29-வது ச்லோகம்முதல் 37-வது ச்லோகம்முடிய, இந்திரலோகத்திற்கு ஏற்பட்ட சங்கடத்தைக் கவிமணி வர்ணித்துப் பிரகிருதத்தைத் தொடங்குகிறார்.

(தொடரும்) கே. வி. சுப்பிரமணிய சாஸ்திரி.

# ஓர் விக்ஞாபனம்.

இவ்வருஷம் உபாகர்மகாலத்திலும் காயத்திரீஜபதினத்திலும் அனேகவிதமான சங்கைகளும், ஸமாதானங்களும், சர்ச்சைகளும் தினசரிப்பத்திரிகைகளிலும், வாரப்பத்திரிகைகளிலும் துண்டுப்பிரசுரங்களிலும் வெளியிடப்பட்டும் அனுஷ்டானம் ஒரேவிதமாய் நடக்காமல்போய்விட்டது; அவரவர்களும் தாங்கள்செய்ததே சரியானது மற்றவை சரியல்லவென்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அது விஷமாய்விசாரம்செய்து எல்லோரும் ஒரேவிதமாக சம்மதிக்கும்படி ஸித்தாந்தம் செய்யவேண்டியது அவசியமானதென்று என் போலிருப்பவர்களுக்குத் தோன்றுகின்றது. ஆனால் அது இவ்வருஷத்திற்கு உபயோகப்படாவிட்டாலும் நித்தியநைமித்திக கர்மமாகையால் பிரதி வருஷமும் செய்யவேண்டியதாதலால் பிந்தியகாலங்களிலாவது உபயோகப்படுமென்பதில் ஸந்தேஹம் இல்லை. அன்றியும் சிலதினங்களுக்கு முன்னமே தொடங்கி விசாரிக்கஆரம்பித்தபடியால் கக்ஷிப்ரதிகக்ஷிகள் பூராவாகவும் முடிவு அடைந்து ஓர்ஸித்தாந்தத்தில் நிலைத்து அதை வெளியிடப்போதுமான காலமும், பத்திரிகையிலிடமும், கிடைக்கவில்லை. இதுவரை வெளிவந்த சர்ச்சையிலிருந்தும் என்னைப்போலொத்த மத்தியாதிகாரிகளுக்குப் பின்னும்பல சங்கைகளுண்டாகின்றன. அவைகளுக்கு சமாதானங்களையும் அறிய விரும்புகிறோம். இதுவரை நடந்தவிவாதங்கள் ஒரேவிதமான முடிவுக்கு வருமா? வாராதா? இரண்டுகக்ஷிகளும் ஸமபலமுடையனவா? இல்லையா? என்பதாகவும் விசாரித்துமுடிவுசெய்யப் பண்டிதர்களை வேண்டுறோம்.

## சங்கை.

காயத்திரீஜபம் ஸாங்கோபாங்கமாய் எங்குவிதிக்கப்படுகிறது? அதற்குக்காலமெது? அதுதிதிப்ரயுக்கமா? அப்படியானால் கண்ட திதியாகவருங்காலத்தில் அதன் விபாப்தி எப்படி இருக்கவேணும்? அது எங்கு கூறப்படுகிறது உபாகர்மத்திற்கும் காயத்திரீ ஜபத்திற்கும் பூர்வாபரீபாவப்1யோஜகமான ஸம்பந்தமுண்டா? அதில் பிரமாணமெது ஸம்பந்தமில்லையென்றால் சிராவணீபௌர்ணமியில் உபாகர்மம் செய்யும்படிநேருங்காலத்தில் அதற்கு மறுநாளிலேயே செய்யவேண்டுமென்ற நிர்ப்பந்தமுண்டா? அது எந்தப்பிரமாணத்தால் கிடைக்கின்றது? பாத்திரபதீ ஆஷாடீ இவைகளில் உபாகர்மம் செய்யநேர்ந்த ஸமயத்தில் உபாகர்மத்திற்கு மறுதினமே காயத்திரீஜபம் செய்ய வேண்டுமென்ற நிர்ப்பந்தம் செய்யமுடியாததுபோல் சிராவணீக்கு மறுதினமே செய்யவேண்டுமென்று நிர்ப்பந்தமில்லாமற்போகுமா? அப்படியானால் சிராவணீ பௌர்ணமிக்கு மறுதினத்திற்கு அடுத்த நாளில் ஒருஸமயம் காயத்திரீ ஜபத்தை செய்யலாமா? கூடாதா? அதற்கென்னப்பிரமாணம்? சிராவணீ பௌர்ணமியில் எள்ளைத்தின்று உபவாஸமிருந்து மறுநாள் காயத்திரீஜபத்தை விதித்த ஆப்ஸதம்ப தர்மஸூத்திர வசனப்படி காயத்திரீ ஜபாங்கமான உபவாஸம் காயத்திரீஜப தினத்திற்கு முதல்நாள் பௌர்ணிமா திதியாயிருந்தால்தான் செய்யப்படவேண்டுமா? அதிதியாகவோ வேறு திதியாகவோ இருந்தால்வேண்டாமா? பௌர்ணமியை கண்டதிதியாய் வரும்போது உபவாஸத்தை எப்பொழுதுச் செய்யவேண்டியது? அதற்குப்பிரமாணமெது? **सद्यश्वसमिदाहितिः** என்ற வசனப்படி உபாகர்மதினத்தன்றே காயத்திரீஜபம் செய்ய நேரும்பொழுது முதல்நாள் உபவாஸமுண்டா? இஷ்டிகால நியாயத்தை இதில் அதிதேசமாகக் கொண்டுவரலாமா? அதிதேசம் விசேஷவசனத்தால் கற்பிக்கப்படுகிறதா? அந்தவசனமெது? பிரகிருதிவிகிருதிபாவத்தால் ஸாமான்யமாய் கிடைக்கிறதா? அப்படியானால் இஷ்டிக்கும் காயத்திரீ ஜபத்திற்கும் பிரகிருதி விகிருதி பாவமுண்டா? அதற்கென்ன பிரமாணம்? ஆபஸ்தம்ப தர்மஸூத்திரத்தில் "ச்வோபூதே" என்றபதத்திற்கு அடுத்தநாள் என்றுதான் அர்த்தமா? அல்லது அஷ்டகாப்பிரகரணத்தில் "ச்வோபூதே,, என்பதற்கு நவமிதிதியென்று அர்த்தம் செய்திருப்பது

போல் (பிரதமாதிதியில்) என்று அர்த்தம் செப்பவேண்டியதா? என்பதாதி சங்கைகள் எனக்குத்தோன்றியவ்வளா எழுதி இருக்கிறேன். இதில் எனக்குத்தோன்ருத சங்கைகளுமிருக்கலாம் அவைகளேயும் பண்டிதர்கள் வருவித்துக்கொண்டு கீழ்க்காட்டிய சங்கைகளுக்கும் மற்றவைகளுக்கும் சமாதானத்தை ஆர்யதர்மம் மூலமாக வெளியிடவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். பலக்கிரந்தங்களின் பரிசீலனமும், நியாயசஞ்சாரஞ்செய்து அர்த்தங் கற்பிக்கவேண்டியபுத்தி ஊஹமுமில்லாத என்னைப் போலொத்தவர்மீது தயவுசெய்து எவரைப்பற்றியும் எவ்வித தூஷணமுமில்லாமல் சாந்தமானமுறையில் வாக்கியார்த்தகோடிகளேஎடுத்துக்காட்டி சம்சயமற சரியானசித்தாந்தத்தை வெளியிடவேணுமென்று பன்முறை பணிந்து பிரார்த்தித்துக் கொள்ளுகிறேன்.

சங்கரன்.

---

# வாரவிருத்தாந்தம்.

சமுத்திரத்தில் பெருங்காயம்:-கலிபுருஷன் கோலாஹல குதூஹலத்துடன் களியாட அவனது செயலான சாரதாசட்டத்தைக் கண்டித்து திருச்சி, கும்பகோணம், காஞ்சி, மசூலிப்பட்டணம், மாயவரம், குண்டூர் இவ்விடங்களிலேயே இவ்வாரம் கண்டனக் கூட்டம் கூடியிருக்கிறது. இது போதுமா? மற்ற ஊரில் ஆஸ்திகரில்லேயா? ஆஸ்திக்யமில்லேயா?

தாடகையா? துப்லி என்ற இடத்தில் தேசிய உபன்யாஸம் செய்ய ஓர் காந்தி சிஷ்யை சென்ருள், ஸ்டேஷன் மாஸ்டர் டிக்கட் கேட்டதற்காக அவரை அடித்துகாயப்படுத்தியதாககேஸ் நடந்துஅபாரதம்விதிக்கப்பட்டாள். அடித்ததுகாயப்படுத்தியதுண்மை அவர் என் கையைப்பிடித்தார் என்று அவள் வாக்குமூலங் கொடுத்தாள். இரவில் பெண்கள் ஊர்விட்டு ஊர் தனியாகச் செல்வதும் புருஷனே அடித்துக்காயப்படுத்தியதும் ராக்ஷஸத்தன்மையே? சாந்தமூர்த்தி காந்திகுரு என் சொல்வார்? பட்டினி கிடப்பரோ?

ஆஸ்திகருக்குவழிகாட்டி:—மதுரையில் ஸ்ரீ சங்காவித்தியாலயம் ஒன்று காலைவேளையில் ஆங்கிலம்கற்கும் மாணவர்களுக்கு அவச்யமான வேதகாவ்யம் கற்பித்துவருகிறது. சென்னை அமாகலாவிலாஸினீஸபை சிஷ்டாசாரபரிபாலன பரிஷத்திலும் சேர்ந்து இதே கைங்கரியத்தை இன்னும் சிறப்பாகச்செய்கிறது. இதன் இக்கால அவச்யத்தை நாம் சொல்ல வேண்டுமோ? மற்ற நகர ஆஸ்திகர் இதை பின்பற்ற வேண்டுகிறோம்.

எது ஆத்யாத்மிகம்? முடிவாக ஸ்ரீயுத காந்தி ஸ்வாராஜ்யம்பெற கப்பலேறிவிட்டார். அவர் நின்றது சிறித்தது பூனைக்குட்டிக்குப்பால்கொடுத்தது முதலிய பல விஷயங்களை ஆச்சரியமாய் வெளியிடும் பத்திரிகைகள் ஆத்யாத்மிக விஷயமாய் அவர் உபன்யஸித்தார் என கொக்கரிக்கிறது. அவர் விஷயமே வேறு. பலர் தற்காலம் வேதாந்தம் என்று கூறி கர்மமார்க்கத்தை நிந்தித்து நித்யகர்மானுஷ்டானத்தையும் கைவிடுகின்றனர். இதுபோலவே வேதாந்த வார்த்தைகளைக்கேட்டு க்ஞானமும் வாராமல் கர்மாவையும்விட்டு நாகத்தையடையக்கூடாதென்பதே நமது வேண்டுகோள்.

மதத்தலைவர் பிரார்த்தனையாம்? ஸர்வகக்ஷி மஹாநாடு நன்கு நடைபெறவேண்டுமென்று லண்டனில் பாதிரிகள் ஓர் பிரார்த்தனை நடத்தினராம். நவநாகரீகம் அங்கிருந்துதான் இந்தியாவுக்கு ஏற்றுமதி ஆகிறது. தேவதா ப்ரார்த்தனை செய்தே எந்த கார்யத்தையும் செய்வதென்பது இந்தியரின் பண்டையகாலத்து தர்மம். ராஜதந்த்ரத்தில் மத விஷயத்தைக்கலப்பதென்பது அங்கு ஓர் ஸமயம் புதிதாக இருக்கலாம். இதுபோன்ற விஷயம் இங்கு விலையாகாதென்று இறக்குமதி செய்யப்படுவதில்லை போலும். நம் தர்மத்தையே சீமையிலிருந்து வந்ததென்றால் பலர் மோஹத்தால் இதை ஏற்பர். அப்படியாவது தர்மம் தழைக்காதா?

ஆர்யதர்மம்:—மோக்ஷத்தைப்போன்ற வேறு சுகம் இல்லை க்ஞானம் தவிர மோக்ஷத்திற்கு வேறு ஸாதனமில்லை. தர்மம் தவிர க்ஞானம்வர வேறு வழியில்லை. அந்த தர்மத்தை எடுத்துரைக்க வேதம்போல் வேறு நூலில்லை. அந்த தர்மத்தை விளக்கிக்கூற பரமாசார்யாள் பரமகருணையுடன்கூட ஆசீர்வதித்துவரும்

ஆர்யதர்மம் என்ற பத்திரிகைபோல் வேறுவகையில்லை. இது பத்திரிகை காலமாதலால் இதன்மூலம் பல வேலை செய்யலாம். ஆதலின் இதை விருத்தி செய்யும்படி ஸ்ரீ பரமாசார்யாள் ஆக்ஞை யிட்டுள்ளார்கள். ஆதலின் சென்னையிலுள்ள மத்ரப்ராந்திய ப்ராம்மணசபையார் ஒவ்வொருவரும் சந்தாதாரராகச் சேர்ந்தனர் மற்ற ஆஸ்திகரும் ஸபையும் இதைப்பின் பற்றுவரோ?

ஸ்ரீவத்ஸ வே ஸோமதேவ சர்மா.

## அரங்கேத்துப்படி.

சென்னை ஸ்ரீ சங்கரமடம் புராணப்ரவசன ஸபையார் வெளி யிட்டுவரும் ஸ்ரீ சங்கரோபதேசத்தின் 6-மாத ஸஞ்சிகைகளும் சென்றவாரம் ஸ்ரீ சங்கராசார்ய விக்ரஹத்திற்கு விசேஷபூஜை நடத்தி ஸதஸ்ஸில் படித்து பண்டிதர்கள் அபிமானிகள்கூறிய அபிப்பிராயம் படிக்கப்பட்டது.

பாகவதபூர்த்தி:-மாம்பலத்தில் இரண்டுவருஷமாக ஸாஹித்ய வாங்முகபூஷணம் ஸ்ரீ ஸோமதேவ சர்மாவைக்கொண்டு பிராமண சபையார் நடத்திவந்த பாகவதம் பூர்த்தியாகி ஸ்காந்தம் சென்ற ஞாயான்று ஆரம்பிக்கப்பட்டது. ஸ்ரீமான் மாயவரம் சுந்தரேசய் யர்வீட்டில் விசேஷபூஜையும் அதிதிபூஜையும் பஜனையும் சிறப்பாக நடந்தது. மாலை 4-மணிக்கு ஸ்ரீ சர்மா அவர்கள் பாகவத கதா ஸங்க்ரஹத்தை ஸர்க்கம் விடாமல்கூறி இடையிடையே தத்வார்த் தங்களையும் தர்மத்தையும் விளக்கி ஸபையார் நடத்தும் வேத வகுப்பில் எல்லோரும் சேரும்படியும் ஆர்யதர்மம் பத்திரிகைக்கு சந்தாதாரராகச் சேரும்படியும் கூறி மாம்பலத்தில்தான்மாத்ரம் வைதிக கர்மானுஷ்டானத்தைச் செய்வதோடில்லாமல் பலரையும் இதில் ஈடுபடுத்தி நற்கர்மாவைச்செய்யும் ஸ்ரீமான் கங்காதரய்யா வர்கள் தீர்காயுஸ்ஸாக இருந்து ஸத்கர்மத்தைச்செய்யும்படி ஆசீர் வ்திக்க பகவானை வேண்டினர். ராயபுரம் கோஷ்டியார் எனும் ஸ்ரீ சர்மாவின் மாணவர்களது வேதபாராயணம் லௌகிகர்க ளுக்கு உத்ஸாகத்தை ஊட்டியது. உபன்யாஸகர்களுக்குத்தக்க ஸம்பாவனைகளையும் பக்தர்களுக்குப் ப்ரஸாதமுமளிக்கப்பட்டது.

L. ராமச்சந்திர சாஸ்திரி.